பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 04 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அரசியல் சாசன சிற்பி அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

- உஜ்ஜைனியில் நடைபெற உள்ள கும்பமேளாவுக்கான ஏற்பாடுகளை ரயில்வே அமைச்சகம் மேற்கொண்டிருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- தமிழ்ப் புத்தாண்டு தினம் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

- தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களால் அரசுப் பள்ளியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

- உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

அரசியல் சாசன சிற்பி அம்பேத்கரின் பிறந்த நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பல்வேறு தடைகளையும் கடந்து தமக்கென ஒரு தனி அடையாளத்தை உருவாக்கிய அம்பேத்கர், தமது அசாத்திய சாதனைகளால் உலகம் முழுவதும் போற்றப்படும் தலைவராக திகழ்கிறார் என தெரிவித்துள்ளார்.

கல்வியாளர், சட்ட நிபுணர், பொருளாதார வல்லுநர், சமூக சீர்திருத்தவாதி என பன்முகத்தன்மை வாய்ந்த அவர், பெண்கள் மற்றும் நலிந்த பிரிவினரின் சமூக பொருளாதார உரிமைகளுக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர் என்றும் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கி நாட்டிற்கு பெருமை சேர்த்த அம்பேத்கரின் கனவை நனவாக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தீவிரமாக பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் உஜ்ஜைனியில் வரும் 2028ஆம் ஆண்டு நடைபெற உள்ள கும்பமேளாவுக்கான ஏற்பாடுகளை ரயில்வே அமைச்சகம் தொடங்கியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் நகரில் இருந்து ராஜஸ்தான் மாநிலம் கோட்டா வழியாக புதுதில்லி செல்லும் புதிய ரயில் சேவையை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவுடன் இணைந்து அவர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. அஸ்வினி வைஷ்ணவ், இந்த ரயில் பல்வேறு முக்கிய இடங்களை இணைக்கும் வகையில் இயக்கப்படுவதாக கூறினார்.

இந்த ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் மத்தியப்பிரதேச ரயில் திட்டங்களுக்கு 14 ஆயிரத்து 745 கோடி ரூபாயும், ராஜஸ்தான் மாநில ரயில் திட்டங்களுக்கு 9 ஆயிரத்து 960 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்ப் புத்தாண்டு தினம் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

குரோதி ஆண்டு முடிவடைந்து விசுவாவசு ஆண்டு பிறப்பதையொட்டி மக்கள் ஆலயங்களுக்குச் சென்று சிறப்பு வழிபாடு செய்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோவில்களில் நடைபெற்ற சித்திரை விஷு கனி காணும் நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தையொட்டி தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன், அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் காரணமாக அரசுப் பள்ளியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் வாலாஜா நகர் அரசு நடுநிலைப் பள்ளி நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், புதுமைப்பெண் மற்றும் நான் முதல்வன் போன்ற திட்டங்களின் பலனாக உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கை 80 சதவீதத்தை கடந்துள்ளது என்றார்.

அரசுப் பள்ளிகள் முன்பு வறுமையின் அடையாளமாக இருந்த நிலை மாறி தற்போது பெருமையின் அடையாளமாக உருவெடுத்துள்ளதாகவும் திரு. சிவசங்கர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

திருவாரூர் திருவிக அரசு கலைக்கல்லூரி பட்டமளிப்பு விழா உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆயிரத்து 131 மாணவர்களுக்கு பட்டங்களை அமைச்சர் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர். பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்திற்கான அதிகாரம் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் புதிய துணைவேந்தர்கள் நியமனம் குறித்து முதலமைச்சர் மற்றும் உயரதிகாரிகளுடன் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

கோடை வெயிலில் இருந்து தற்காத்துக்கொள்ள மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. சதீஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

கால்நடைகள் மற்றும் பறவைகளுக்கும் உரிய பாராமரிப்பை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப், கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கையை முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என சீனா வலியுறுத்தியுள்ளது.

-------------

மேற்கு ஆப்பிரிக்க நாடான **Gabon**-னின் புதிய அதிபராக அந்நாட்டின் ராணுவ தளபதி **Brice Oligui Nguema** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

-------------

நேபாள தலைநகர் காத்மாண்டில் நடைபெற்ற தேசிய தோட்டக்கலை கண்காட்சி மூலம் ஒரு கோடியே 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள், பூச்செடிகள், தோட்டக்கலை சாதனங்கள் விற்பனையாகியுள்ளது.

-------------

திபெத்தில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 4 புள்ளி இரண்டாக பதிவானது.

-------------

ஜம்மு-கஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்திற்கு உட்பட்ட பாலாகோட் பகுதியில் நேரிட்ட கண்ணி வெடி விபத்தில் ராணுவ வீரர் ஒருவர் காயமடைந்தார்.

-------------

மும்பையில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறையை சமாளிக்கும் விதமாக மாநகர் முழுவதும் பேரிடர் மேலாண்மைச் சட்டம் அமல்படுத்தப்படுவதாக **Brihan** மும்பை மாநகராட்சி அறிவித்துள்ளது.

-------------

மிசோரமில் 52 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களை பறிமுதல் செய்த வருவாய் புலனாய்வு பிரிவினர் இது தொடர்பாக இருவரை கைது செய்தனர்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் கலவை அருகே பென்னகர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீகாட்டேரி அம்மன் கோவிலில் நடைபெற்ற வினோத திருவிழாவில் ஏராளமான மக்கள் கருப்பு ஆடை அணிந்து தரிசனம் செய்தனர்.

-------------

நீலகிரி மாவட்டம் குன்னூர் தந்திமாரியம்மன் கோவில் திருவிழாவில் பங்கேற்ற பக்தர்கள், பூக்குண்டம் இறங்கி வேண்டுதலை நிறைவேற்றினர்.

-------------

கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சுகிராமம் அருகேயுள்ள ரஸ்தாகாடு கடலில் குளித்த கல்லூரி மாணவர் ராட்சத அலையில் சிக்கி உயிரிழந்தார்.

-------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

ஃபுளோரிடாவில் நடைபெற்றும் வரும் இப்போட்டியின் ஆடவர் குழு பிரிவில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

ஆடவர் பிரிவில் தீரஜ் பொம்மதேவரா வெண்கலப் பதக்கம் வென்றார்.

-------------

18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி சவுதி அரேபியா புறப்பட்டுச் சென்றது.

இப்போட்டி நாளை தொடங்கி 3 நாட்கள் நடைபெற உள்ளது.

---------------

உலகக் கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டி இன்று சீனாவின் **Macao**-வில் தொடங்குகிறது.

வரும் 20ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியா சார்பில் மணிகா பத்ரா, ஸ்ரீஜா அகுலா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

-----------

**Prague**-ல் நடைபெற்ற பாரா பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகுமார் - இஸ்ரேலின் **Konstantin** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 21-17, 21-15 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் டேவிட் - பிரான்சின் **Bruno** இணையை வென்றது.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 12 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

**<<<<The End>>>>**